# இலங்கை அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சுகாதார சேவைகள் பணிப்பாளரிற்கு விநியோகிக்கப்பட்ட மருந்துகள் தொடர்பில் முன்னைய ஐந்து ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான ரூபா 208,143,509 வரவுத் தாள்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டில் அதற்குச் சமனான பெறுமதியால் கடன்பட்டோரும் ரூபா 19,890,083 ஆல் கடன்விற்பனைகளும் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) சுகாதார சேவைகள் பணிப்பாளரிற்கான வழிச்சரக்கிருப்பில் சர்ச்சைக்குரிய ரூபா 175,092,481 இருப்பும் உள்ளடங்கியிருந்தது. எவ்வாறாயினும் இதில் அடங்கியிருந்த விற்பனை செய்ய முடியாது என இனங்காணப்பட்ட மீதிக்காக ரூபா 109,935,365 இற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய கொள்கல வைப்புக்களின் பெறுமதி ரூபா 7,226,842 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 3,722,648

மீளாய்வாண்டிற்கும் எஞ்சிய ரூபா 3,504,194 ஆனது 2003-2010 வரைக்குமான ஆண்டுகளிற்குரியனவாகும்.

(ஆ) மொத்த வியாபாரக் கடன்பட்டோர் பெறுமதியான ரூபா 4,730,606,130 இல் ரூபா 3,937,579,457 சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து பெறப்பட வேண்டிய கடன் தொகையாகக் காணப்பட்டதுடன் அதில் 1 வருடத்திற்கும் மேற்பட்ட ரூபா 2,348,736,498 கடன் மீதியும் 5 வருடத்திற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 301,056,701 கடன் மீதியும் உள்ளடங்கியிருந்தன.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2000 ஜனவரி 31 ஆந் திகதிய பீஎப்/பீஈ/6 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | ரூபா 2,776,773 ஆன உழைக்கும் போதே செலுத்தும் வரியை ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்குப் பதிலாக கூட்டுத்தாபனத்தின் நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய 09 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவர் நிலயத்தின் சுற்றறிக்கை | |
| 2.9.1 ஆம் பிரிவு | பிரதான கொள்வனவுச் சபையின் தலைவருக்கும் ஏனைய அங்கத்தவர்களிற்கும் செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா 3,000 மற்றும் ரூபா 2,000 ஆன போதிலும் ரூபா 17,500 மற்றும் ரூபா 15,000 வீதம் செலுத்தப்பட்டிருந்ததுடன் சிற்றின கொள்வனவுச் சபையின் தலைவருக்கும் ஏனைய அங்கத்தவர்களிற்கும் செலுத்த வேண்டிய ரூபா 500 மற்றும் ரூபா 250 இற்குப் பதிலாக ரூபா 12,500 மற்றும் ரூபா 10,000 |

| | |
|---|---|
| | வீதம் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| 2.9.1 ஆம் பிரிவு | சாதாரண வேலை நேரத்தில் கொள்வனவுச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. |
| 2.2.9 ஆம் பிரிவு | 12 உத்தியோகத்தர்களின் சராசரிச் சம்பளம் ரூபா 289,913 இனை தாண்டியிருந்த போதிலும் கொள்வனவுச் சபைகளில் தற்போதும் உள்ள உத்தியோகத்தர்களின் எதிர்வரும் கொள்வனவுச் சபை படிகளிலிருந்து அம்மேலதிக செலுத்தல்கள் கழிக்கப்படவுள்ளன. |
| 6.3.6 ஆம் பிரிவு | விலைமனுக்களைத் திறப்பதற்காக உரிய படிவங்கள் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அதில் குழு உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருக்கவில்லை. |
| (இ) 2011 இன் 09 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்திய) அதிகாரச்சட்டம் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கழிக்கப்பட வேண்டிய உள்ளீட்டு வரிக்குப் பதிலாக மொத்த உள்ளீட்டு வரியும் கழிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தமையால் 2011 இன் முதலாம் காலாண்டிற்குரிய ரூபா 28,425,110 தொகையான பெறுமதி சேர் வரிப் பொறுப்பு ஏய்ப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 2.14.1 | ரூபா 100,909,346 பெறுமதியான cellulose wadding BP (1998) in 500g rolls கொள்வனவு செய்வதற்கான தீர்மானத்தினை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னரே கூட்டுத்தாபனத்தினால் கட்டளையிடப்பட்டிருந்தது. அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் பதவிநீக்கம் செய்யப்பட்டு தற்போது ஒழுக்காற்று நடவடிக்கை இடம்பெறுவதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.2.4 தெளிவான முறைகேடுகளும் முறையற்ற கொடுக்கல்வாங்கல்களும்

---

தரம் குறைவாக காணப்பட்டமையால் மருத்துவ வழங்கல் பிரிவினால் நிராகரிக்கப்பட்டிருந்த Ampicillin Injection BP 250 mg மருந்திற்கான ரூபா 10,454,080 செலவினத்தினை தொடர்புடைய வழங்குனரிடமிருந்து அறவிட்டுக் கொள்ளலோ அல்லது தரக்குறைவான மருந்திற்குப் பதிலாக புதிய விடயங்களை பெற்றுக் கொள்ளலோ இடம்பெற்றிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 515,843,207 தேறிய இலாபமொன்றானதுடன் அதனை முன்னைய ஆண்டிற்கான ரூபா 483,774,625 வரிக்குப் முன்னரான தேறிய இலாத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 32,068,582 அதிகரிப்பொன்று காட்டப்பட்டது.

மீளாய்வாண்டின் நிதிச் செலவினமான ரூபா 422,895,753 பெறுமதியைக் கழிக்க முன்னர் கூட்டுத்தாபனத்தால் ரூபா 938,738,960 செயற்பாட்டு இலாபமொன்று ஈட்டப்பட்டிருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டிற்கான ரூபா 816,578,399 நிதிச் செலவினத்தைக் கழிக்க முன்னரான செயற்பாட்டு இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 122,160,561 ஆல் செயற்பாட்டு இலாபம் அதிகரித்திருந்தது.

கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டிற்கான இலாப விகிதாசாரம் 11.14% ஆனதுடன் அது முன்னைய ஆண்டில் 11.59% ஆக இருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்கான தேறிய இலாப விகிதம் 1.59% ஆகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாப விகிதம் 1.25% ஆக காணப்பட்டது.

மீளாய்வாண்டில் தேறிய இலாபம் அதிகரிப்பதற்கு விற்பனையில் ஏற்பட்டிருந்த ரூபா 2,161,813,332 வளர்ச்சியும் நிராகரிக்கப்பட்ட இருப்புக்களிற்குப் பதிலாக வழங்குனர்களிடமிருந்து ரூபா 46,504,669 அறவிடப்பட்டமையுமே தாக்கம் செலுத்தியிருந்தன.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) (i) நிதி விளைவுகள் தொடர்பான முக்கிய தரவுகள் முன்னைய ஆண்டிற்கான ஒப்பீட்டுப் பெறுமதிகளுடன் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2011 ஆம் ஆண்டு | | | 2010 ஆம் ஆண்டு | | |
|---|---|---|---|---|---|---|
| | கூட்டுத்தாபனம் | சு.சே.அமை. | மொத்தம் | கூட்டுத்தாபனம் | சு.சே.அமை. | மொத்தம் |
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புரள்வு/சேவைக்கட்டணம் | 4,794 | 12,523 | 17,317 | 3,508 | 10,969 | 14,476 |
| விற்பனைக் கிரயம்/நேர்ச் செலவு | 3,756 | 11,706 | 15,462 | 3,202 | 10,280 | 13,483 |
| மொத்த இலாபம் | 1,038 | 817 | 1,855 | 989 | 688 | 1,677 |
| செயற்பாட்டு இலாபம் | 525 | 413 | 939 | 466 | 351 | 817 |
| நிதிச் செலவினம் | 1 | 422 | 423 | 7 | 325 | 333 |
| ஏனைய வருமானம் | 27 | 46 | 73 | 24 | - | 24 |
| தேறிய இலாபம் (வரிக்கு முன்) | 524 | (8.5) | 516 | 458 | 25 | 484 |
| வரிச் செலவினம் | 235 | - | 235 | 231 | 13 | 244 |
| தேறிய இலாபம் (வரிக்கு பின்) | 273 | (8.5) | 265 | 170 | 9 | 180 |

(ii) ஒசுசல நிலையங்களின் நிதி மீளாய்வு

| | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 |
|---|---|---|---|---|---|
| செயற்பாட்டிலிருந்த ஒசுசல எண்ணிக்கை | 25 | 25 | 23 | 21 | 20 |
| உழைத்த இலாபம் (ரூபா மில்லியன்) | 95.31 | 96.62 | 97.38 | 44.21 | 54.81 |
| நட்டம் ஈட்டிய ஒசுசல எண்ணிக்கை | 09 | 06 | 04 | 10 | 08 |
| ஈட்டப்பட்ட நட்டம் (ரூபா மில்லியன்) | 7.25 | 7.02 | 3.8 | 9.16 | 12.46 |

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நட்டத்தில் இயங்கியிருந்த ஒசுசலகளின் எண்ணிக்கை 06 இலிருந்து 09 வரை அதிகரித்திருந்தது. இது மொத்த ஒசுசல இன் எண்ணிக்கையில் 36% ஆகும்.

(இ) பின்வரும் ஒசுசலகள் இரண்டு மற்றும் மூன்று ஆண்டுகளாக நட்டத்தில் இயங்கியிருந்ததுடன் 2011 நவம்பர் மாதம் பதுளை பேரூந்து தரிப்பிட ஒசுசல மூடப்பட்டிருந்தது.

| | ஈட்டப்பட்ட நட்டம் | | |
|---|---|---|---|
| | 2011 | 2010 | 2009 |
| | ரூபா | ரூபா | ரூபா |
| பதுளை - பேரூந்து தரிப்பிடம் | 2,187,893 | 1,419,707 | 1,893,568 |

| | | | |
|---|---|---|---|
| பதுளை – (கூ.மொ.நி) | 2,182,122 | 3,612,156 | - |
| ஹம்பாந்தோட்டை | 103,316 | 616,915 | 82,867 |

## 2.3 செலவினங்களின் அதிகரிப்பு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 05 செலவின விடயங்களின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்த காரணங்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவின விடயம் | 2011 | 2010 | அதிகரித்த சதவீதம் | காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | |
| குத்தகைப் பெறுமதி | 1,469,067 | 468,749 | 213% | புதிய ஓசுசல இனை ஆரம்பித்தலும் வருடாந்த குத்தகைக் கட்டணங்கள் அதிகரித்தமையும் |
| தொழில் கட்டணங்கள் | 1,289,879 | 501,713 | 157% | கணக்குகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஆலோசகரிற்காக மாதாந்தம் ரூபா 100,000 வீதம் தொழில் கட்டணம் செலுத்தியமை |
| பணிப்பாளர் கட்டணங்கள் | 348,750 | 54,000 | 546% | பணிப்பாளரிற்காக செலுத்தப்படும் கட்டணங்களும் போக்குவரத்துப் படியும் அதிகரித்தமை. |
| நன்கொடைகள் | 2,071,042 | 8,280 | 24913% | வெள்ளத்தினால் இருப்பிடங்களை இழந்த நபர்களிற்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 1.5 மில்லியன் இற்கு நீர் போத்தல்களை கொள்வனவு செய்தமை. |
| மருந்து ஆய்வுகூடக் கட்டணங்கள் | 735,568 | 136,447 | 439% | வெளிவாரி மருந்து ஆய்வு கூடங்களினால் 2011 ஆம் ஆண்டில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டமை. |

## 2.4 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

| | 2011 | 2010 | அவதானிப்பு |
|---|---|---|---|
| **(அ) திரவத் தன்மை விகிதங்கள்** | | | |
| நடைமுறை விகிதம் - உள்ளபடியான | 1.35 | 1.35 | நடைமுறைப் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு போதியளவு தொழிற்படு மூலதனம் நிறுவனத்திடம் இல்லாமை. |
| - நியமம் | 2 | 2 | |
| திரவச் சொத்து விகிதம் - உள்ளபடியான | 0.88 | 0.71 | |
| - நியமம் | 1 | 1 | |
| **(ஆ) செயற்பாட்டு விகிதங்கள்** | | | |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் தடவைகள் | 3 | 4 | கடன்களை அறவிடுதல் திருப்திகரமான நிலையில் காணப்படாமை |
| கடன்பட்டோர் புரள்வுக் கால நாட்கள் | 113 | 84 | சேகரித்தல் காலம் 29 நாட்களால் அதிகரித்திருந்தமை |
| இருப்புப் புரள்வு விகிதம் தடவைகள் | 5 | 3 | கூட்டுத்தாபனத்தின் இருப்புடன் ஒப்பிடுகையில் பயனுள்ள விற்பனை இடம்பெறாமை |
| இருப்புப் புரள்வுக் காலம் நாட்கள் | 72 | 100 | இருப்புக்கள் விற்பனை செய்யப் படுவதற்கு 72 நாட்கள் எடுக்கப் பட்டிருந்தமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகித்திருந்த ரூபா 153,725,956 பெறுமதியான மருந்துகள் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில்

ரூபா 67,906,599 மருந்துகள் தரமற்றவையாகவும் ரூபா 72,179,561 பெறுமதியான மருந்துகள் நியமக் குறைபாடுகள் காரணமாகவும் நிராகரிக்கப்பட்டிருந்தன. கணக்காய்வுத் திகதி வரை மேற்படி தரத்தில் குறைந்த மருந்துகளில் ரூபா 9,509,996 பெறுமதியான இருப்பினையும் நியமக் குறைபாடுகள் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்த ரூபா 11,699,811 பெறுமதியான இருப்பினையும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மீள விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மருந்து தீர்வையகப் போக்குவரத்து மற்றும் மருந்துகளை களஞ்சியப்படுத்தி வைத்தல் சேவையியைப் பெற்றுக்கொள்வதற்காக முன்னைய ஆண்டிற்கான கேள்வி விலையைக் காட்டிலும் ரூபா 656,507 கூடிய விலையை சமர்ப்பித்திருந்த ஒப்பந்தகாரரிற்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்ததுடன் நிராகரிக்கப்பட்ட / காலம்கடந்த இருப்பினை வைத்திருப்பதற்காக களஞ்சிய வாடகையாக மீளாய்வாண்டின் முதல் 3 மாதங்களிற்கு ரூபா 3,295,481 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2001-2007 காலப்பகுதிக்குரிய ரூபா 12,869,527 இருப்பிற்காகவும் 2009, 2010 மற்றும் மீளாய்வாண்டிற்குரிய முறையே ரூபா 19,466,338 ரூபா 23,241,960 மற்றும் 16,325,200 சேதமைடைந்த / பயன்படுத்த முடியாத இருப்பிற்காகவும் காப்புறுதிக் கோரிக்கைகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்கான முன்கூட்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த வங்கி மேலதிகப்பற்று வட்டி ரூபா 419.24 மில்லியன் ஆனதுடன் அது முன்னைய ஆண்டைக் காட்டிலும் 14% அதிகரிப்பாகும்.

(ஆ) பெறுமதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலம்கடந்த 257 மருந்துப் பொருட்களிற்குரிய 7,019,807 அலகுகளும் 2011 ஜனவரி முதல் நவம்பர் வரை காலம் கடந்திருந்த 33 மருந்துப் பொருட்களிற்குரிய 19,801 அலகுகளும் இரத்மலானையிலுள்ள வாடகைக்கு எடுக்கப்பட்ட களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(இ) மருந்து வழங்கல் பிரிவு கோரியிருந்த Bone Cement Low Viscosity என்ற சத்திரசிகிச்சை நுகர்வுப் பொருளிற்குப் பதிலாக ரூபா 1,900,976 பெறுமதியான

Bone Cement Medium Viscosity என்ற சத்திரசிகிச்சை நுகர்வுப் பொருளையே கூட்டுத்தாபனம் விநியோகித்திருந்தமையால் கோரப்பட்டிருந்த நியமங்களிற்கு அமைவாக காணப்படாமையால் மருத்துவ வழங்கல் பிரிவு பொறுப்பேற்பதற்கு மறுத்திருந்தது.

(ஈ) மருத்து வழங்கல் பிரிவிற்கு வழங்கியிருந்த ரூபா 10,454,080 பெறுமதியான Ampicilling Injection BP 250 mg எனும் மருந்து தொடர்பாக வைத்தியசாலைகளிலிருந்து கிடைத்திருந்த முறைப்பாடுகள் தொடர்பில் தேசிய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அம் மருந்துகள் தரக்குறைவாகக் காணப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

(உ) Sodium Chloride Intravenous மருந்தினை உரிய காலத்தில் உரிய காலத்தில் விநியோகிக்காமை மற்றும் வெளி நிறுவனங்களின் கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தியமை காரணமாக செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்த கொள்கல தாமதக் கட்டணங்கள் மற்றும் உரிய நேரத்தில் ஆவணங்கள் கிடைக்காமையால் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டு வழங்குனர்களிடமிருந்து அறவிடப்படாத தாமதக் கட்டணப் பெறுமதிகள் முறையே ரூபா 1,461,064 மற்றும் ரூபா 3,758,675 ஆகக் காணப்பட்டன.

(ஊ) Closed Wound Suction Drainage System and Thoracic Chest Drainage Catheter என்ற மருந்துப் பொருளின் இறக்குமதியின் போது குறித்த நியமங்கள் மற்றும் நிபந்தனைகளிற்கு அமைவானவையா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காதிருந்தமையால் மருத்துவ வழங்கல் பிரிவு நிராகரித்திருந்த அந்த மருந்தின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 3,332,738 ஆகும்.

(எ) மருத்து வழங்கல் பிரிவிற்கு வழங்கியிருந்த ரூபா 229,233,142 பெறுமதியான Sodium Chloride Intravenous என்ற மருந்தின் 306212147 ஆம் இலக்க தொகுதிக்குரிய போத்தலில் கண்டறியப்படாத பொருளொன்று காணப்படுதல் வெளிப்பட்டிருந்த போதிலும் குறித்த மருந்துகள் பயன்படுத்தப்பட்டு முடிவுற்றிருந்தன. அதன் மூலம் நோயாளர்களிற்கு ஏற்பட்டிருந்த பாதிப்புக்கள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சுகாதார சேவைகள் பணிப்பாளரிற்கும் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நடவடிக்கைகளிற்காகவும் தருவிக்கப்பட்டிருந்த மருந்துகளை உரிய காலத்தில் துறைமுகத்திலிருந்து அகற்றிக்கொள்ளாமையால் 2007 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மொத்தம் ரூபா 119,003,021 தாமதக் கட்டணமாக

செலுத்தப்பட்டிருந்தது. செலுத்தியிருந்த தாமதக் கட்டணங்களின் அளவு குறைந்த மட்டத்தில் பேணப்பட்டதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

---

பின்வரும் இழப்புக்கள் கணக்காய்வில் வெளிப்பட்டன.

(அ) மருந்துகள் காலாவதியாதல், தரமற்றுப் போதல் மற்றும் உடைந்திருந்தமை காரணமாக ரூபா 11,265,891 பெறுமதியான மருந்துகள் அழிவுற்றிருந்தன.

(ஆ) மருத்துவ வழங்கல் பிரிவு மருந்துகளைப் கையேற்பதற்கு மறுத்திருந்தமையால் ரூபா 1,267,656 மேலதிக போக்குவரத்துக் கட்டணமும் ரூபா 743,650 தாமதக் கட்டணமும் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(இ) DHS/SU/003/01G/09 ஆம் இலக்க கட்டளைக்குரிய தேவைப்பாடுகளுடன் இணங்காமை காரணமாக மருத்துவ வழங்கல் பிரிவு கையேற்பதற்கு மறுத்திருந்த ரூபா 2,212,573 பெறுமதியான சத்திரசிகிச்சை நுகர்வுப் பொருளிற்கு செலுத்தியிருந்த தொகையினை மீள அறவிட்டுக் கொள்வதற்கோ அல்லது குறித்த மருந்தினைப் பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 இன் 10 ஆம் இலக்க வருமான வரி அதிகாரச்சட்டத்தின் 138 ஆம் பிரிவின் படி 2007 முதல் 2010 வரையான ஆண்டுகளில் மருந்துகள் மீதான தேசிய வரி செலவு வைத்தலை (National Tax) சரியாக சீராக்காமையால் ரூபா 447,864 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(உ) களஞ்சிய வசதிகள் இன்மை காரணமாக வழங்கல் பிரிவு கையேற்பதற்கு மறுத்திருந்த DHS/JA/304/10 மற்றும் 484/10 ஆம் இலக்க கட்டளைகளிற்குரிய 323,500 மருந்துக் குப்பிகளை தனியார் களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமையால் ரூபா 1,597,480 பெறுமதியான 37,325 குப்பிகள் மழை நீரினால் முழுமையாக அழிவுற்றிருந்தன.

(ஊ) நீர்கொழும்பு ஒசுசலவில் ரூபா 3,863,610 விற்பனை வருமானம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டதாக போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு மோசடி செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாட்சி

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2007 முதல் 2011 ஆம் ஆண்டு வரைக்குமான கூட்டிணைந்த திட்டத்தில் அடையப்பட வேண்டியிருந்த நோக்கங்களில் தகவல் முகாமைத்துவ முறைமையினைத் தாபித்தல், கொழும்பு 07 புதிய கட்டிடத்திற்கு ஆய்வுகூட வசதியினை வழங்கல், இரத்மலான புதிய மருந்துக் களஞ்சிய நிர்மாண நடவடிக்கைகளை மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

செயல்நடவடிக்கைத் திட்டத்திலிருந்த பின்வரும் கருமங்களை உரிய காலத்தில் நிறைவேற்ற முடியாது போயிருந்தது.

| | கருமம் | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த காலம் |
|---|---|---|
| i. | புத்தளம், கம்பஹ, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் அரசாங்க ஒசுசலவினை ஆரம்பிப்பதற்காக இடங்களை இனங்காணல் | 2011 முதலாம் காலாண்டின் முடிவில் |
| ii. | தர ஆய்வுகூடத்திற்காக பகுப்பாய்வாளர் ஒருவரையும் தரக் கட்டுப்பாட்டு உதவியாளர்கள் இருவரையும் ஆட்சேர்த்தல் | 2011 யூன் |
| iii. | தர ஆய்வுகூட நடவடிக்கைகளின் ஒரு பகுதியை தேசிய அபாயகர ஒளடதங்கள் அதிகாரசபைக்கு வழங்குதல் | 2011 ஆகஸ்ட் |

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

---

மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் விற்பனை முறைமை, கொள்வனவுச் செயற்பாடுகள் மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவுகளின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளைப் பரிசோதனைக்கு உட்படுத்தாது ஒசுசல கணக்காய்விற்கு கூடிய கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.4 கொள்வனவுத் திட்டம்

---

மீளாய்வாண்டிற்குரிய கொள்வனவுத் திட்டம் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்கு அது தயாரிக்கப்பட்டிருந்தது.

## 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களிற்கிடையே குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் காணப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) விற்பனைகள்

(ஆ) இருப்புகள்

(இ) கொள்வனவு நடவடிக்கைகள்

(ஈ) கடன்பட்டோர் கட்டுப்பாடும் அறவீடும்

(உ) அறிக்கைகளை நாளதுவரையாக்கல்

(ஊ) தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல்

(எ) ஒசுசலக்களில் சேகரிக்கப்படும் பணத்தை வங்கியில் வைப்புச் செய்தல்